**தலைப்பு 270 – அம்பாறை மாவட்டச் செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 270 – அம்பாறை மாவட்டச் செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்களும் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களை உள்ளடக்கிய கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அம்பாறை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2024 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான அம்பாறை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவே அன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் ஒன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன என

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த இவ்வறிக்கையின் 1.6.1(ஈ)(i) மற்றும் (ii) பந்திகளின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) வருமானம் அல்லாத பெறுவனவுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திறைசேரி அச்சுப் பிரதியின் படி வைப்புக் கணக்கு அறிக்கை (SA30) மீளாய்வாண்டின் போது வைப்புக்கள் பெறுவனவு ரூபா 193,645,218 தொகை எனினும் நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானம் அல்லது பெறுவனவின் கீழ் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் வைப்புக்கள் பெறுவனவு என ரூபா 1,136,086,512 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் திறைசேரி அச்சுப் பிரதி மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள வைப்புக்கள் பெறுவனவு இடையே ரூபா 942,441,294 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டுள்ள தரவுகள் சரியானவை எனவும் திறைசேரி அச்சுப் பிரதியில் காணப்படும் தரவுகள் சரியானவை அல்ல. 2022 ஆண்டில் SA 30 படிவத்தின் படி வைப்புக் கணக்கு அறிக்கையின் இறுதி மீதி 2023 ஆண்டின் SA 30 அறிக்கையின் ஆரம்ப மீதியாக இருக்க வேண்டிய போதிலும் அங்கு வேறு பிழையான தரவு ஒன்று காட்டப்பட்டிருந்தது. | வித்தியாசங்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க முன்னர் திறைசேரியின் அச்சுப் பிரதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | திறைசேரி அச்சுப் பிரதியின் படி பரீட்சை மீதியில் (SA21) மாவட்ட செயலகத்தின் கீழ் அறவிடப்பட்ட முற்பணங்கள் பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 60,471,451 தொகை எனினும் நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பணங்கள் பெறுவனவு ரூபா 69,413,731 தொகை ஆகக் காட்டப்பட்டிருந்தமையால் திறைசேரி ஏடுகள் மற்றும் நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்த முற்பணங்கள் பெறுவனவிடையே ரூபா 8,942,280 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | மாவட்ட செயலகத்தின் முற்பணக் கணக்கு பின்வருமாறு இரண்டு வகையில் அடங்குகின்றது.<br>1. அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு<br>2. அதிகாரமளிக்கப்பட்ட திறைசேரி முற்பணக் கணக்கு<br>இவ்வாண்டில் அதிகாரமளிக்கப்பட்ட முற்பணக் கணக்கின் கீழ் ரூபா 3,993,535 முற்பணக் கணக்கின் செலவுகள் பதியப்பட்டமையால் 118011 இன் கீழ் ரூபா 1,250 தொகை 2003.02.99.00 ஆகிய வருமானக் கணக்கில் காட்ட வேண்டியதற்கு பதிலாக குறிப்பிடப்பட்டிருந்தமையால் தவறு ஏற்பட்டிருக்கின்றது என அறிவிக்கின்றேன். | வித்தியாசங்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க முன்னர் திறைசேரியின் அச்சுப் பிரதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஆ) **மீண்டுவரும் செலவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி அச்சுப் பிரதியின் படி பரீட்சை மீதியில் (SA21) மாவட்ட செயலகத்திற்கான மேற்கொள்ளப்பட்ட மீண்டுவரும் செலவுகள் ரூபா 4,520,261,907 தொகை எனினும் நிதிச் செயலாற்றல் கூற்றின் படி ரூபா 4,523,217,502 தொகையாக காணப்பட்டமையால் திறைசேரி ஏடுகளில் மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்த மீண்டுவரும் செலவுகளில் ரூபா 2,955,595 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களின் தரவு சரியானவையே. | வித்தியாசங்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க முன்னர் திறைசேரியின் அச்சுப் பிரதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(இ) **வைப்புக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | திறைசேரி அச்சுப் பிரதியின் படி வைப்புக் கணக்கு அறிக்கையில் | நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டுள்ள தரவுகள் சரியானவையாக | வித்தியாசங்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க |

| | | | |
|---|---|---|---|
| | (SA30) வைப்பு கொடுப்பனவு ரூபா 350,459,640 தொகை எனினும் நிதிச் செயலாற்றல் கூற்றில் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் வைப்புக்கள் கொடுப்பனவு பெறுமதி ரூபா 1,144,057,460 தொகையாகக் காணப்பட்டமையால் திறைசேரி ஏடுகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் காட்டப்பட்டிருந்த வைப்புக்கள் கொடுப்பனவிடையே ரூபா 793,597,820 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | காணப்படுவதுடன் திறைசேரி அச்சுப் பிரதியில் காட்டப்பட்டுள்ள தரவுகள் சரியானவை அல்ல. 2022 ஆண்டின் SA30 அறிக்கையின் படி வைப்புக் கணக்கு அறிக்கையின் இறுதி மீதி 2023 ஆண்டின் SA30 படிவத்தின் ஆரம்ப மீதியாக காணப்பட வேண்டிய போதிலும் அங்கு வேறு பிழையான தரவுகள் காட்டப்பட்டுள்ளது. | முன்னர் திறைசேரியின் அச்சுப் பிரதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | திறைசேரி ஏடுகளின் படி வைப்புக் கணக்கு அறிக்கை (SA30) அடங்கியுள்ள வைப்புக் கணக்குகளில் முன்னைய ஆண்டு இறுதியில் காட்டப்பட்டுள்ள மீதி ரூபா 79,564,819 தொகை எனினும் மீளாய்வாண்டின் ஆரம்ப தினத்தில் காணப்பட்ட மீதி ரூபா 228,408,294 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் முன்னைய ஆண்டு இறுதிமீதி மற்றும் மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதி இடையே ரூபா 148,843,475 இற்கான வித்தியாசம் காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்களின் தரவுகள் சரியாவையாக காணப்படுவதுடன் திறைசேரி வைப்புக் கணக்கு அறிக்கை (SA30) வைப்புக் கணக்கில் முன்னைய ஆண்டு இறுதியில் உள்ளவாறு மீதி மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி ஒத்ததாக காணப்படவில்லை. இது திறைசேரியின் தரவு முறைமையின் வழு ஒன்றாகும். | - மேற்படி - |

(ஈ) **ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (i) | தமன, அட்டாளைச்சேனை, திருக்கோயில் ஆகிய பிரதேச செயலகங்களுக்குரிய காணிகளும் பதியதலாவ மற்றும் தமன இரண்டு பிரதேசங்களுக்குரிய உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் அரச வீடுகளை பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்தக் காணிகள் மற்றும் கட்டிடங்கள் பெறுமதி மதிப்பீடு செய்து தரும் படி விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு வேண்டப்பட்டுள்ள போதிலும் இது வரை பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை. நினைவூட்டல் பல விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தவுடன் சொத்துக்களுடன் உட்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | மாவட்ட செயலகத்திற்கு உரிய சொத்துக்களை இனங்கண்டு அவற்றை சரியாக பெறுமதி மதிப்பீடு செய்து அவற்றை நிதிக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த பதினைந்து பிரதேச செயலகத்தை உரிய நில செவன கட்டிடங்களின் பெறுமதி ரூபா 46,422,256 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தற்போது மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டதுடன் நில செவன கட்டிடங்களின் நிர்மாண வேலைகளுக்காக செலவிடப்பட்டிருந்த தொகையின் படி கட்டிடங்களின் பெறுமதி சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக சொத்துக்கள் என உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. காணிகளின் உரிமையை தீர்த்துக் கொண்ட பின்னர் பெறுமதி மதிப்பீடு செய்து சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக சொத்துக்கள் என உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | - மேற்படி - |
| (iii) | திரண்ட நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையில் அடங்கியுள்ள (SA82) மீளாய்வாண்டு ஆரம்ப தினத்தில் நடைபெறு வேலையின் கீழ் ரூபா 7,130,174 தொகை பெறுமதியான அரசாங்க வீடுகள் மற்றும் சுற்றுலா வீடுகளும் ரூபா 28,500,000 தொகை பெறுமதியான கார்கோ வாகனங்கள் என கூட்டுத்தொகை ரூபா 35,630,174 தொகை காணப்படுகின்றது என காட்டப்பட்டிருந்த போதிலும் பௌதீக ரீதியாக அவ்வாறான நடைபெறு வேலை அல்லது கார்கோ வாகனம் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள தரவுகள் சரியானவையாக காணப்படுவதுடன் மாவட்ட செயலகத்தின் சிகாஸ் நிகழ்ச்சித் திட்ட தரவுகளின் படி அவ்வாறான பௌதீக ரீதியாக நடைபெறு வேலை அல்லது கார்கோ வாகனம் தொடர்பான தரவுகள் காணப்படவில்லை. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்க முன்னர் சரி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | திரண்ட நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையில் (SA82) அடங்கியுள்ள நிதியல்லாத சொத்துக்களில் முன்னைய ஆண்டு இறுதியில் காட்டப்பட்டுள்ள மீதி ரூபா 3,418,509,241 தொகை எனினும் மீளாய்வாண்டின் ஆரம்ப திகதியில் மீதி ரூபா 6,786,702,138 தொகை காட்டப்பட்டிருந்தமையால் முன்னைய ஆண்டின் இறுதி மீதி மற்றும் மீளாய்வாண்டிற்கான ஆரம்ப மீதியிடையே ரூபா 3,368,192,897 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | இது நிதியல்லாத சொத்துக்களின் முன்னைய ஆண்டின் இறுதி மீதி மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி திறைசேரி அச்சுப் பிரதிகளில் தவறுதலாக பதியப்பட்டிருந்தமையால் ஏற்பட்டிருந்ததொன்றாகும். | வித்தியாசங்களை இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்க முன்னர் திறைசேரியின் அச்சுப் பிரதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | மீளாய்வாண்டு ஆரம்ப தினத்தில் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்கள் கணக்கின் பொழிப்பு அறிக்கையில் (SA80) நான்கு சொத்து விடயங்கள் தொடர்பான ஆரம்ப மீதி ரூபா 3,718,140,210 தொகை எனினும் திரண்ட நிதியல்லாத சொத்துக்கள் கணக்குக் கூற்றில் (SA82) அந்த நான்கு சொத்துக்கள் விடயங்கள் தொடர்பான ஆரம்ப மீதி ரூபா 7,417,865,709 ஆகும். அதன் படி இரண்டு அறிக்கைகளினதும் நிதியல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதிகளிடையே ரூபா 3,699,725,499 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | இது நிதியல்லாத சொத்துக்களின் முன்னைய ஆண்டின் இறுதி மீதி மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி திறைசேரி அச்சுப் பிரதிகளில் தவறுதலாக பதியப்பட்டிருந்தமையால் ஏற்பட்டிருந்ததொன்றாகும். | - மேற்படி - |
| (vi) | நிதி செயலாற்றல் கூற்றின் படி மீளாய்வாண்டின் போது மூலதன சொத்துக்கள் தனதாக்கலின் பெறுமதி ரூபா 35,609,488 தொகை எனினும் திறைசேரி ஏடுகளின் படி திரண்ட நிதியல்லாத சொத்துக்கள் கணக்கு அறிக்கையில் (SA 82) அது ரூபா 35,474,687 தொகையாகக் காட்டப்பட்டமையால் நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் திறைசேரி ஏடுகளிடையே மூலதனச் சொத்துக்கள் தனதாக்களின் பெறுமதியின் ரூபா 134,801 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | நிதிக் கூற்றுக்களின் தரவுகள் சரியானவை | - மேற்படி - |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022/2023 பெரும் போகத்தின் நெற்கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த 2023 பெப்ரவரி 09 திகதிய மற்றும் இலக்கம் DRD/2023-1 கொண்ட சுற்றறிக்கையின் பிரிவு 4.2 இன் படி நெல் கொள்வனவின் போது | 2022/2023 பெரும்போக நெல் கொள்வனவு மற்றும் நெல் இருப்பினை அகற்றும் நிகழ்ச்சித் திட்டம் பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது எனவும் அந்த சிக்கலான செய்முறைக்காக பிரதேச செயலாளரின் தலைமையில் அந்த அலுவலகத்தின் பதவியணி உத்தியோகத்தர்கள் | ஏதேனும் செலவு விடயத்திற்காக வழங்கப்படும் ஏற்பாடுகளின் கீழ் அந்த செலவு விடயத்திற்குரிய செலவுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்படுகின்ற செயற்பாட்டுச் செலவுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், தமன பிரதேச செயலகத்தினால் நிருவாகச் செலவுக்காக வழங்கியிருந்த ரூபா 3,390,123 இற்கான ஏற்பாடுகளின் கீழ் பண்பாட்டு நிலையாத்தின் மின்சார பில் பத்திரத்தை தீர்த்தல் திட்டமிடல் பிரிவின் தொலைபேசி பில்பத்திரத்தை தீர்த்தல் போன்ற கருமங்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 142,025 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. | மற்றும் திட்டமிடல் பிரிவின் உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவொன்று தமன பண்பாட்டு நிலையத்தில் செயற்பட்டிருந்தமையால் பண்பாட்டு நிலையத்தின் நீர் மற்றும் மின்சார பில்பத்திரங்களை தீர்த்தல், திட்டமிடல் பிரிவின் தொலைபேசி பில்பத்திரங்களை தீர்த்தல் இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக ஈடுபட்டவர்களின் மேலதிக நேரம் மற்றும் பிரயாணச் செலவு மேற்கூறிய பணத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். | |

**2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | **மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு** | | |
| (i) | கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டம் 2018 முதல் 2022 ஆண்டு வரையான காலப் பகுதியில் கிராம சக்தி சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 132,202,409 இற்கான கடன்தொகையில் ரூபா 79,784,715 தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | இணக்க சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு கடனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவைக் கடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக சௌபாக்கிய அபிவிருத்தி பணியகம் மூலம் வெளியிடப்பட்டிருந்த இலக்கம் SDB/SPV/GS/2022/சுற்றறிக்கை 01 மற்றும் 2022 ஜூன் 28 திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படு நிலையில் காணப்படும் கிராம சக்தி தாய் சங்கங்களில் காணப்படுகின்ற பணத்தை பயன்படுத்தி நுண் நிதிக் கடன் நிகழ்ச்சித் திட்டமொன்றிற்காக அத்தியவசிய உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதற்காக | சௌபாக்கிய அபிவிருத்தி பணியகத்தின் மூலம் 2024.04.09 திகதி அனுப்பியிருந்த இலக்கம் SDB/GS/DIST/2024 கடிதத்தின் அறிவுரையின் படி செயற்படாத கிராம சக்தி அபிவிருத்தி சங்கங்களுக்கு சொந்தமான நிதியங்கள் செயற்படு சங்கங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த | தகைமையுடைய நலன்பெறுவோரை தெரிவு செய்து கடன் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை உயிர்ப்புடன் மேற்கொண்டு வருவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| மற்றும் சங்கத்தின் அங்கத்தவர்களின் ஏனைய அத்தியவசிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செயற்திட்டங்களுக்கு பயன்படுத்தக் கூடியதாக இருந்த போதிலும் அம்பாறை மாவட்டத்தில் 244 பதிவு செய்யப்பட்ட சங்கங்களில் செயற்படு நிலையில் காணப்படும் 138 சங்கங்கள் சுற்றறிக்கையின் படி தமது நிதியத்தை பயன்படுத்தாமல் தமது வங்கிக் கணக்குகளில் கூட்டுத்தொகை ரூபா 29,576,689 இற்கான தொகையொன்று விளைவற்று தடுத்து வைத்திருந்ததுடன் பதிவு செய்யப்பட்டிருந்த மொத்த சங்கங்களிடையே 2023 ஆண்டளவில் 106 செயற்படாத சங்கங்கள் அவர்களின் வங்கிக் கணக்கில் ரூபா 7,923,492 இற்கான தொகையொன்று தடுத்து வைத்திருந்தது. | போதிலும் இதுவரை செயற்படாத சங்கங்களின் பதிவினை முடிவுறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்க ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | பெறுமதி ரூபா. | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 2009/09 கொண்ட பொது நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரிவு 2.iv | 194,220 | நேரத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளமாகிய நிலையான கடமை நேரத்தின் பின்னர் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவுகளுக்காக காலத்தை அடிப்படையாக எடுப்பதெனின் அந்த காலம் விரலடையாள இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது மஹஓய பிரதேச செயலக பதவியணி | ஏற்பட்ட தவறினை மற்றும் பதவியணியினர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். இதன் பின்னர் சுற்றறிக்கை அறிவுரையின் படி செயற்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டது. தற்போது விரலடையாள இயந்திரம் செயற்படு நிலையில் காணப்படுவதால் அந்த தரவுகளின் | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர்களுக்கு 2023 ஆண்டிற்காக அவ்வாறாக விரலடையாள இயந்திரம் பயன்படுத்தாமல் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை நாள் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டது. | அடிப்படையில் மேலதிக மற்றும் விடுமுறை நாள் சம்பளக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. | |
| (ஆ) | 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 2.4.1 | 3,437,826 | அட்டாளைச்சேனை மற்றும் திருக்கோயில் பிரதேச செயலகங்களினால் பெறுகை வழிகாட்டலுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது தொழிநுட்ப குழுவின் பரிந்துரையின்றி பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் பெறுகைக் குழு தொழிநுட்பக் குழு இன்றி குறிப்பிட்ட கொள்வனவு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டது எனவும், அதே போல் திருக்கோயில் பிரதேச செயலகத்தின் பெறுகைக் குழு தொழிநுட்ப மதிப்பாய்வு குழுவின் சில அங்கத்தவர்கள் விடுமுறை சென்றிருந்தமையால் குழுவின் பரிந்துரையை குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் பெற்றுக் கொள்ளாமல் கொள்வனவு அலுவல்களில் ஈடுபட்டிருந்தது. பெறுகை செயல் நடவடிக்கை கோவை, பெறுகை கைநூல் மற்றும் மேலதிக அறிவுரைகள் கடுமையாக கடைபிடிக்கும் படி குறிப்பிட்ட பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாமல் கைவிடப்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கு வட்டாரத்தின் பாடசாலை ஒன்றிற்கான காணி ஒன்று தனதாக்களுக்காக மாகாண கல்வித் திணைக்களத்தினால் வழங்கியிருந்த ரூபா 6,500,000 தொகை குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தாமல் வைப்புக் கணக்கில் 05 வருட காலம் முதல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | இந்தத் தொகை அட்டாளைச்சேனை அக்/அல்/அர்ஹம் பாடசாலைக்கு தனியார் காணி ஒன்று உரித்தாக்கும் அலுவல்களுக்காக வைப்புச் செய்யப்பட்டிருந்தது. குறிப்பிட்ட காணியின் உரித்தாக்கும் அலுவல்களுக்காக நீண்ட காலமொன்று செலவிடப்படும் பல கட்டங்களைக் கொண்ட கருமம் ஒன்றாகும். அந்த ஒவ்வொரு கட்டத்துக்கும் தனித்தனியாக காணியமைச்சின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். மேலும் நில அளவையாளரின் நில அளவைப் படம் கிடைப்பதில் தாமதம் காணப்படுவதுடன் அனைத்து கட்டங்களும் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் கொடுப்பனவு மேற்கொண்டு குறிப்பிட்ட காணியை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச செயலாளர் அறிவிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட காலப் பகுதியில் வேலை பூர்த்தி செய்து வைப்புக் கணக்கை தீர்த்துக் கொள்ள வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தமன பிரதேச செயலகத்திற்கு அம்பாறை மாவட்ட செயலகத்தினால் வழங்கியிருந்த பதிவுச் சான்றிதழ் இல்லாத உரிமையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத இலக்கம் RA-3273 கொண்ட டிரக்டர் வண்டி 2018 ஆண்டு முதல் ஓட்ட முடியாத நிலைமையில் காணப்பட்டமையால் | ஏல விற்பனைக்காக பொது நிருவாக மற்றும் உள்நாட்டு விவகார அமைச்சின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன் மேலதிக மாவட்ட செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் ஏல விற்பனைக் குழுவினால் தொடர்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | விரைவாக அப்புறப்படுத்தல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக வளவில் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த வாகனத்தை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அவ்வாறின்றேல் அப்புறப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | மஹஓய பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட தன்னார்வு அமைப்பொன்றின் மூலம் தொண்டர் அமைப்பொன்றுக்கு வழங்கியிருந்த இணைந்த சூடு மிதிக்கும் இயந்திரம் இரண்டு, டிரக்டர் ஒன்று மற்றும் டேலர் ஒன்று அந்த தொண்டர் அமைப்பின் பிணக்கு ஒன்று காரணமாக 2012 ஆண்டின் மஹஓய பிரதேச செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. 2023 திசெம்பர் 31 திகதியளவிலும் அது தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்காததுடன் குறிப்பிட்ட வாகனங்கள் தற்போது பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | இது அரச சொத்தொன்றல்லாமல் காணப்படுவதுடன் தன்னார்வு அமைப்பொன்றின் மூலம் பிரதேசத்தின் தொண்டர் அமைப்பொன்றிற்கு இந்த உபகரணங்கள், தொண்டர் அமைப்பில் ஏற்பட்டிருந்த பிணக்கு ஒன்று காரணமாக பிரதேச செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பித்து அதன் பரிந்துரையின் படி செயற்படுவேன். | குறிப்பிட்ட தொண்டர் அமைப்புடன் கலந்துரையாடி அப்புறப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |
| (இ) | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான வாகனம் ஒன்று கடந்த 22 வருடங்களை மிகையான காலம் முதல் திருத்த வேலைக்காக கராஜ் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அதனை திருப்பிப் பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த லொறி வண்டி உக்கிய நிலையில் காணப்படுவதனால் மாவட்ட செயலகத்திற்கு எடுத்து வரல் முடியாமையால் அந்த இடத்திலேயே ஏல விற்பனை செய்வதற்காக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த வாகனம் புனர்வாழ்வு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளமையால் சொத்துக்கள் சுற்றறிக்கை 03/2008 இன் படி உரிமையை மாவட்ட செயலாளருக்கு உரித்தாக்கப்பட வேண்டும். புனர்வாழ்வு அமைச்சு தற்போது காணப்படாததுடன் அந்த விடய அலுவல்கள் மேற்கொள்ளும் அமைச்சு எது என இனங்காணல் கடினமாக உள்ளது. எவ்வாறாயினும் இந்த வாகனம் உரித்தாக்கல் தொடர்பான வேண்டுதல் நீதி | நிதியமைச்சின் கொம்டோலர் ஜெனரல் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டிருந்த 2020 ஒக்தோபர் 02 திகதிய மற்றும் 05/2020 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் படி பயன்படுத்த முடியாத வாகனங்களை விரைவாக அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மற்றும் சிறைச்சாலை அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஈ) மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தினால் 2019 ஆண்டு முதல் 2023 திசெம்பர் 31 திகதி வரை 10 மோட்டார் சைக்கிள்கள் ஓட்டத்திற்காக பயன்படுத்தப்படாமல் 4 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் களஞ்சியத் தொகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ஓட்டத்திற்கு தகைமையற்ற 05 மோட்டார் சைக்கிள்கள் ஹாடி தொழிநுட்ப கல்லூரி மாணவர்களின் கல்வி அலுவல்களுக்காக வழங்கப்பட்டது. தொழிநுட்ப குழுவொன்று நியமனம் செய்து ஓட்ட நிலைக்கு எடுக்க முடியாத மோட்டார் சைக்கிள்களை இனங்கண்டு அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதியமைச்சின் கொம்டோலர் ஜெனரல் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டிருந்த 2020 ஒக்தோபர் 02 திகதிய மற்றும் 05/2020 இலக்கம் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் படி பயன்படுத்த முடியாத வாகனங்களை விரைவாக அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்பாறை மாவட்ட செயலகத்திற்க சொந்தமான சத்தாதிஸ்ஸபுர களஞ்சிய 2015 செப்தெம்பர் 21 திகதி திருடர்களினால் திறக்கப்பட்டு பண்டங்கள் எடுத்துச் சென்றமையால் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 850,738 தொகை என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2024 மே 07 திகதியளவிலும் அது தொடர்பாக தொடர்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விசாரணை சபையின் தீர்மானம் 2023.07.06 திகதி மாவட்ட செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் தொடர்பாக ஆரம்ப விசாரணை மேற்கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிவடையாமையால் நி.பி.104(4) இறுதி விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது. | ஏற்பட்டுள்ள நட்டத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினர்களிடம் அறவீடு செய்வதற்கு அல்லது வேறேதும் நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022/2023 பெரும் போகத்தில் அரசாங்கத்தின் நெற் கொள்வனவு மற்றும் நெல் இருப்பினை அகற்றம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரிசி ஆலை உரிமையாளர் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்பு அரிசாக மாற்றுவதற்காக அறுதியான செய்முறை ஒன்றூடாக | திறைசேரியின் அபிவிருத்தி நிதித் திணைக்கள அறிவுரையின் படி திறந்த கூறுவிலைகள் அழைத்து மிருக உணவுக்காக விற்பனை செய்யப்பட்டது. நெல் இருப்பு அரிசாக மாற்றப்பட்ட போது போதியளவு கட்டளைகள் கிடைக்கப் பெறாமையால் அந்த அரிசி இருப்பு காலவதியாகியிருந்ததுடன், நெல் | குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தரினால் முறையான செய்முறை ஒன்றின் மீது முறையான மேற்பார்வை ஒன்றுடன் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டளைகள் வழங்கள் மேற்கொள்ளப்படாமையால் குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தப்படாமல் அண்ணளவாக ரூபா 41,848,330 பெறுமதியான 389,546 கிலோகிராம் அரிசி தொகை ஒன்று 2023 ஆகஸ்ட் 21 கணக்காய்வுத் திகதியளவிலும் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற நிலைமையை அடைந்திருந்தது. தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் படி அந்த நுகர்வுக்கு தகுதியற்ற அரிசி எண்ணிக்கை 158,736 கிலோகிராம் கணக்காய்வுத் திகதி அளவிலும் முறையான மேற்பார்வை ஒன்று இன்றி சந்தைக்கு விடுவிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | ஆலை உரிமையாளர்களினால் அந்த அரிசி பிரதேச செயலாளருக்கு அறிவிக்காமல் மிருக உணவுக்காக விற்பனை செய்யப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 2022/2023 பெரும் போகத்தின் நெற்கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் நெல் இருப்பினை அகற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த 2023 பெப்ரவரி 09 திகதிய மற்றும் இலக்கம் DRD/2023-1 கொண்ட சுற்றறிக்கையின் பிரிவு 4.2 இன் படி நெற் கொள்வனவின் போது ஏற்படக் கூடிய செயற்பாட்டுச் செலவுகள் குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய அரச அங்கீகாரங்களுக்கு கீழ்படிய மேற்கொள்வதற்கு மாவட்ட செயலாளரினால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அம்பாறை மாவட்ட செயலகத்தினால் பொதுவான செயற்திட்டங்களுக்காக நிருவாக செலவுகள் ஒதுக்கும் விதத்தில் ஒட்டுமொத்த ஏற்பாட்டுத் தொகையாகிய ரூபா 3,089,000,000 தொகையில் 1% என மாவட்ட செயலகம் மற்றும் 17 பிரதேச செயலகங்களுக்காக ரூபா 30,890,000 தொகை நிருவாகச் செலவுகளுக்காக ஏற்பாடுகள் ஒதுக்கி சுற்றறிக்கைக்கு முரணாக உத்தியோகத்தர்கள் உண்மையாகவே மேற்கொண்ட | அம்பாறை மாவட்டத்தில் 30000 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்ய வேண்டுமென அபிவிருத்தி நிதித் திணைக்களம் அறிவித்திருந்ததுடன் நெல் இருப்பொன்று கொள்வனவு செய்து 24 மணித்தியாலத்திற்குள் குறிப்பிட்ட விவசாயியின் கணக்கிற்கு பணம் செலவு வைக்கப்பட வேண்டும். இது மிகவும் சிக்கலான செய்முறையாக காணப்பட்டதுடன் ரூபா 270 மில்லியன் பெறுமதிக்கான நெல் கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு கொடுப்பனவு செய்ய நேரிட்டது. நெல் ஆலை உரிமையாளர்களை தெரிவு செய்தல், அவர்களை பதிவு செய்தல், விவசாயிகளை இனங்காணல், அவர்களிடம் கொள்வனவு செய்யும் நெல்லின் எண்ணிக்கையை தீர்மானித்தல், அறிக்கைகள் தயாரித்தல், வங்கிகளுக்கு செலுத்துவதற்காக அனுப்புவதற்கு நேரிடல், இந்த கருமங்களுக்காக கடமை நேரித்திற்கு வெளியே கடமையாற்றுவதற்கு நேரிடல், தொடர்ச்சியாக வெளிக்களத்திற்கு செல்வதற்கு நேரிடல், இந்த அலுவல்களுக்காக தனிப்பட்ட கையடக்க தொலைபேசியை | சுற்றறிக்கைக்கு இணங்க உண்மையாகவே மேற்கொள்ளப்பட்ட நிருவாக செலவு மாத்திரம் முறையான அங்கீகாரத்துடன் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவினை கவனத்தில் எடுக்காமல் அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் வாய்மொழி அறிவுரை மீது எனக் குறிப்பிட்டு அம்பாறை மாவட்ட செயலாளரின் தலைமையில் குழு ஒன்று நியமனம் செய்து அந்த குழுவின் தீர்மானத்தின் படி குறிப்பிட்ட உத்தியோகத்தர்களின் அடிப்படை சம்பளத்தின் ¼ பெறுமதிமதிக்கு சமமான தொகையொன்று அவர்கள் செயற்திட்டத்தில் ஈடுபட்டிருந்த மாதங்களின் அடிப்படையில் கூட்டுத்தொகை ரூபா 15,580,562 தொகை நிருவாகச் செலவு என 2023 ஜூலை மாதம் அளவில் செலுத்தி முடிந்திருந்தது. | பயன்படுத்த நேரிடல் ஆகிய விடயங்கள் மீது தலைவராக மாவட்ட செயலாளரினால் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தை வினவி கிடைத்த அறிவுரையின் படி குழு ஒன்று நியமித்து அதில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி இந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கொடுப்பனவு மேற்கொள்ள முன்னர் துறைத் தலைவரின் மற்றும் பிரதேச செயலாளரின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | |
| (இ) | நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த 2023 பெப்ரவரி 09 திகதிய மற்றும் இலக்கம் DRD/2023-1 கொண்ட சுற்றறிக்கையின் பிரிவு 2.3.2 இன் படி இந்த நிகழ்ச்சித் திட்டம் 2023 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 ஆகஸ்ட் 08 திகதியளவிலும் குறிப்பிட்ட களஞ்சியங்களில் மீதியாக காணப்பட்ட 420,546 கிலோகிராம் அரிசி மற்றும் 8,779,903 கிலோகிராம் நெல் இருப்பு தொடர்பாக முறையான நடவடிக்கை ஒன்று எடுத்திருக்கவில்லை. அதன்படி இந்த செயற்திட்டம் முடிவடைந்திருக்காத போதிலும் இது தொடர்பாக நிருவாகச் செலவு என மேற்குறிப்பிட்ட தொகை உத்தியோகத்தர்களுக்கு செலுத்தியிருந்தது என அவதானிக்கப்பட்டது. | அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் அறிவுரையின் படி 30000 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்திருந்த போதிலும் ஏனைய மாவட்டங்களில் இருந்து அரிசிக்கான கேள்வி கிடைக்கப் பெறாமையால் எதிர்பார்த்த காலப் பகுதியில் நிகழ்ச்சித் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போனது. தற்போது நெல் இருப்பினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செயற்திட்டம் ஒன்றிற்காக நிருவாகச் செலவு அந்த செயற்திட்டம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட பின்னரே செலுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் படி உஹன பிரதேச செயலகத்திற்கு அம்பாறை மாவட்ட செயலகத்தினால் நிருவாகச் செலவுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் கீழ் மேற்குறிப்பிட்ட குழுவின் தீர்மானத்தின் மீது ஒவ்வொரு உத்தியோகத்தர்களினதும் | பிரதேச செயலகங்களுக்காக மேலதிக நேர, விடுமுறை நாள் சம்பளம் மற்றும் பிரயாண செலவுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் முடிவடைந்திருந்ததால் கணக்குப் பிரிவிற்கு வழங்கியிருந்த அலுவலக உத்தியோகத்தர்களின் பல மாதங்களுக்குரிய உறுதிச் | மிகையாக செலுத்தப்பட்டிருந்த தொகையை மீண்டும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அடிப்படை சம்பளத்தின் ¼ வீதத்திற்கு கொடுப்பனவுக்கு மேலதிகமாக விடுமுறைநாள் சம்பளம் பிரயாண செலவு மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு என ரூபா 367,181 தொகை 16 உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. | சீட்டுக்களுக்காக இந்த நிர்வாக செலவுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத்தின் மூலம் செலவு மேற்கொள்ளப்பட்டது என பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. | |

### 3.5. முகாமைத்துவப் பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிட்டிருந்த இலக்கம் 01/2023 மற்றும் 2023 ஜனவரி 27 திகதிய சுற்றறிக்கைக்கு இணங்க அரச செலவைக் கட்டுப்படுத்தும் தேவைப்பாடு மீது மாத்திரம் மேலதிக நேர கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அட்டாளைச்சேனை மற்றும் கல்முனை பிரதேச செயலகங்களில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் 134 பேர் மிகையாக காணப்பட்ட போதிலும் அவர்களிடையே சரியான வேலைப் பகிர்வு மேற்கொண்டிருக்காமையால் 2023 இற்காக 35 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,012,564 இற்கான மேலதிக நேர கொடுப்பனவு செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | அட்டாளைச்சேனை மற்றும் கல்முனை பிரதேச செயலகங்களினால் மேலதிக நேரக் கொடுப்பனவு அவசர மற்றும் அத்தியவசியமான கடமை அலுவல்கள் பொதுவான கடமை நேரத்திற்கு வெளியே மேற்கொள்ளப்பட்டமையால் வருட ஆரம்பத்தில் மற்றும் வருட இறுதியில் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளுக்காக செலுத்தப்பட்டது எனவும் சில வேலை விடயங்களுக்காக பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் மூலம் மாத்திரம் நிறைவேற்றிக் கொள்வதற்கு நேரிடுவதனால் (Itmis, Cigas) அந்த அலுவல்கள் ஏனைய உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி நிறைவேற்றிக் கொள்வதற்கு முடியாமையால் அந்த கடமைகளை நிறைவேற்றுவதற்காக மேலதிகநேர கொடுப்பனவு செலுத்துவதற்கு நேரிட்டது எனவும் சாரதிகளுக்காக மேலதிக நேர கொடுப்பனவு செலுத்த நேரிட்டது எனவும் பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதே போல் எதிர்காலத்தில் இந்த விடயங்களை மீண்டும் மதிப்பீடு செய்து வேலைப்பகிர்வு மேற்கொண்டு ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் பயிற்சி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்கள் இடையே சரியான வேலைப் பகிர்வொன்று மேற்கொண்டு அலுவலகத்தின் மிகை ஊழியர்களை பயன்படுத்தி சுற்றறிக்கைக்கு இணங்க மேலதிக நேர கொடுப்பனவு செலுத்துவதை குறைக்கக் கூடியவாறு அலுவலக விடயங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022/2023 பெரும் போகத்தில் நெற் கொள்வனவு மற்றும் நெல் இருப்பினை அகற்றுவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் நெற் கொள்வனவு செய்து குறைந்த வருமானமுடையோருக்கு அரிசி வழங்கிய பின்னர் அரிசி ஆலை உரிமையாளர்களின் பொறுப்பில் காணப்பட்ட அரசாங்க நெல் இருப்பினை அரிசியாக மாற்றி விற்பனை செய்தல் தொடர்பாக அபிவிருத்தி நிதித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டிருந்த 2023 ஜூலை 17 திகதிய இலக்கம் DFD/MD/GPPP/PD/Maha/2022/23 கொண்ட கடிதத்தின் படி மாவட்ட செயலகத்தின் கீழ் மீதியாகக் காணப்படும் நெல் இருப்புத் தொடர்பாக 2023 செப்தெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலாவது டென்டரின் படி தெரிவு செய்யப்பட்டிருந்த கொள்வனவாளருக்கு அரிசை விற்பனை செய்வதற்காக 7 பிரதேச செயலகப் பிரிவுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்டிருந்த 24 நெல் ஆலையினால் மாவட்ட செயலகத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 170,122,703 தொகை பெறுதிமதியான அரிசி 1,226,373 கிலோகிராம்கள் 2024 மே 05 திகதியளவிலும் வழங்குனர்களுக்கு வழங்கி மாவட்ட செயலகத்திற்கு பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரிசி ஆலை உரிமையாளர்களின் பொறுப்பில் மீதியாக காணப்படும் அரிசி இருப்பு அபிவிருத்தி நிதித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் DFD/MD/GPPP/PD/Maha/2022-23 மற்றும் 2023.07.17 திகதிய கடிதத்தின் படி பெறுகை அலுவல்கள் ஊடாக விற்பனை செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் படி முதலாம் கட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட கொள்வனவாளர்களுக்கு நெல் விற்பனை செய்யும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் 2024.05.20 திகதியளவில் குறிப்பிட்ட அரசி ஆலை உரிமையாளர்களினால் 1,226,372.99 கிலோகிராம் அரிசித் தொகையொன்று வழங்குவதற்கு மீதியாகக் காணப்பட்டதுடன் அந்த அரிசியின் பெறுமதி ரூபா 170,122,703.38 ஆகும். | அறவிடப்பட வேண்டிய அரிசி எண்ணிக்கையை விரைவாக அறவீடு செய்வதற்கு மற்றும் அவ்வாறு அரிசி வழங்கப்படாத நெல் ஆலை உரிமையாளர் தொடர்பாக விரைவாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | தமன, அக்கரைப்பற்று மற்றும் கல்முனை ஆகிய பிரதேச செயலகங்களினால் வழங்கியிருந்த நீண்டகால குத்தகை காணி உறுதிகள் தொடர்பாக ரூபா 24,538,440 இற்கான குத்தகைத் தொகையொன்று 2023 திசெம்பர் 31 திகதியளவில் அறவிடப்பட வேண்டியிருந்தது. | ❖ கல்முனை பிரதேச செயலகங்களுக்கு சொந்தமான அரச காணிகள் நீண்டகால குத்தகை மீதி உங்களால் குறிப்பிடப்பட்ட ரூபா 2,362,517 இற்கான தொகையில் இது வரை ரூபா 680,967 தொகை அறவீடு செய்திருந்ததுடன், மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>❖ அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்கு சொந்தமான | நிலுவைத் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நீண்டகால குத்தகை செலுத்துபவரான எஸ்.எம்.ஏ. சகி என்பவர் குத்தகைத் தொகை மீதியை செலுத்த முடியாமைக்கான காரணம் வியாபாரக் குறிக்கோளுக்காக வழங்கப்படும் குத்தகை அடிப்படையை இரத்து செய்து வீட்டு அலுவல்களுக்காக நீண்ட கால குத்தகை அடிப்படை மீது வழங்கும் படி வேண்டி காணி ஆணையாளர் நாயகத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | அட்டாளைச்சேனை, பொத்துவில், நிந்தவூர் மற்றும் அக்கரைப்பற்று ஆகிய பிரதேச செயலகங்களுக்கு சொந்தமான 17 அரச காணி துண்டுகளில் அங்கீகாரமின்றி எரிபொருள் நிரப்பு நிலையம், சுற்றுலா ஹோட்டல்கள் ஆகிய தொழில்கள் மேற்கொள்ளப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | அட்டாளைச்சேனை, பொத்துவில், நிந்தவூர் மற்றும் அக்கரைப்பற்று ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உரித்தான குறிப்பிட்ட 17 காணித் துண்டுகளும் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு அனைத்து ஆவணங்களும் மாகாண காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அற்கான அங்கீகாரம் கிடைத்தவுடன் நீண்டகால அடிப்படையில் குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீண்டகால குத்தகை அடிப்படையில் சாட்டுதல் செய்தல் மற்றும் குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2364 தொகை, உள்ளவாறான பதவியணி 2945 தொகையுமாக காணப்பட்டதுடன், பதவியணியில் காணப்படும் 81 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் 662 பேருக்கான மேலதிக பதவியணியை முறைப் பிரகாரம் அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேலதிக பதவியணி காணப்படுவது இரண்டாம் மட்ட தொகுதி என கணிக்கப்படும் அபிவிருத்தி உத்தியோத்தராகும். இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது அமைச்சு மட்டத்தில் எடுக்கப்பட்ட கொள்ளைசார் தீர்மானத்தின் படியாகும். 81 வெற்றிடங்கள் காணப்படுவது ஏனைய பதவியணிகளிலேயாகும். அத்துடன் அது தொடர்பாக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் மிகைப் பதவியணியை முறைப் பிரகாரம் அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |